Koviloor Digital Library

கோவிலூர் KOVILOOR MADALAYAM

ஸ்ரீ நாராயணீயம்



ACC. NO. 4133

ஸ்ரீ சங்கர ஸத்குரு சேவாஸ்ரமம்
, பிச்சு பிள்ளை சந்து, மைலாப்பூர், மதராஸ்-4.

1963] [விலை 50 nP.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ நாராயணீயம் 2-ம் பாகம்

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 4133
௳௨௨

பொருள் அடக்கம்

தசகம்	விஷயம்	பக்கம்
11.	ஜய விஜயர்களின் அபசாரம்	2
12.	வராஹாவதாரம்	8
13.	ஹிரண்யாக்ஷனுடன் தர்மயுத்தம்	16
14.	ஸ்ரீ கபிலர் வரலாறு	23
15.	ஸ்ரீ கபிலர் ஞான உபதேசம்	30
16.	நர நாராயண அவதாரம்	33
17.	துருவ சரித்திரம்	44
18.	பிருது சரித்திரம்	52
19.	ப்ராசேதஸ்களின் ஜப யக்ஞம்	60
20.	ரிஷப தேவர் மஹிமை	67

"பூஜா கோடி ஸமம் ஸ்தோத்ரம்"

எல்லோரும் என்றும் பாராயணம் செய்து சாந்தியடைவாருக.

பப்ளிஷர் :

ஸ்வாமி ஸச்சிதானந்த ஸரஸ்வதி

ஸ்ரீ சங்கர சத்குரு சேவாஸ்ரமம்
22, பிச்சு பிள்ளை தெரு, மைலாப்பூர்,
மதராஸ்–4.

Koviloor Digital Library

ஸ்ரீ நாராயணீயம்

2-ம் பாகம்

உரையாசிரியர் : ஸச்சிதானந்தம்

11-வது தசகம்

11-1 ஸனகாதிகள் வைகுண்டம் செல்லுதல்

க்ரமேண ஸர்கே பரிவர்த்தமானே
கதாபி திவ்யா: ஸனகாதயஸ்தே
பவத்வி லோகாய விகுண்டலோகம்
ப்ரபேதிரே மாருத மந்திரேச.

உலக சிருஷ்டி இயல்பாக விருத்தியுறும் போது
ஒரு தினத்தே ஜனகாதி நால்வரும் உன்
பதமாய்
இலகு திரு வைகுந்தம் எய்தினர்கள் அன்றோ!
ஏந்து புகழ்க் குருவாயூர் இறைவ!
அருள்வாயே !

ஹே குருவாயூரப்பா ! சிருஷ்டியானது முறையே நன்கு பெருகி வருகையில், தைவீக சக்தி நிறைந்த ஸனகர் முதலிய முனிவர்கள், தங்களை தரிசிப்பதற்காக வைகுண்ட லோகத்தை அடைந்தார்கள்.

11-2 வைகுண்ட வர்ணனம்

மனோக்ஞநைச் ரேய ஸகான நுத்யை:
அனேக வாபீ மணி மந்திரைஸ்ச
அனோபமம் தம் பவதோ நிகேதம்
முனீஸ்வரா: ப்ராபுர தீத கக்ஷ்யா:

Koviloor Digital Library

மணி நிறைந்த மனைகள். குளம், உத்தியான
வனம் திகழும் வைகுந்தம் அடைய
அணி நிறைந்த கோட்டைகள் ஆறினையும் தாண்டி
ஆல் நிழலில் ஞானம் உறும் ஆன்றவர்
வந்தனரே.

ஸனகாதிகள் ஆறு கோட்டை வாயில்களைக் கடந்து, மனதிற்கு இனிமையும் நந்தவனம் என்ற பெயருடையதுமான தோட்டங்கள், குளங்கள், ரத்ன மயமான வீடுகள் இவற்றைப் பார்த்துக்கொண்டே தங்கள் இருப்பிடமான வைகுண்டத்தை அடைந்தார்கள்.

11-3 ஜய விஜயர்கள் ஸனகாதிகளைத் தடுத்தல்

பவத்தி த்ருக்ஷ்ஒன் பவனம் விலிக்ஷ்ஒன்
த்வார் ஸ்தௌ ஜயஸ்தான் விஜயோப்ய
ருந்தாம்
தேஷாம் சசித்தே பதமாப கோப:
ஸர்வம் பவத்ப்ரேரண யைவ பூமன்.

நினைக்காண வீடுபுக வந்திடு(ம்) மாதவரை
நிறுத்தினரால் ஜய விஜயராம் காவலர்கள்
இனைத்தாகத் தவமுனிவர் சினம் உற்(று) எழுந்தார்
ஈசா! நின் நியமனமே இதன் மூலம் அன்றோ.

தங்களைத் தரிசிப்பதற்காக, வைகுண்டத்தில் புக விரும்பிய, அந்த ஸனகாதிகளை, வாயில் காவலர் ஜயனும் விஜயனும் தடுத்தனர். ஸனகாதிகள் அதனால் கோபமடைந்து சாபம் கொடுத்தனர்! இவைகள் எல்லாம் தங்கள் நியமனமே யல்லவா.?

Koviloor Digital Library

11-4 ஸனகாதிகள் ஜயவிஜயர்களை சபித்தல்

வைகுண்ட லோகானு சித்ப்ரசேஷ்டௌ
கஷ்டௌ யுவாம் தைத்ய கதிம் பஜேதம்
இதி ப்ரசப்தௌ பவதாஸ்ரிதௌ தௌ
ஹரிஸ் ம்ருதிர் நோஸ்த்விதி நேமதுஸ்தான்.

"பதத்தில் வாழ்வுறத் தகுதியில்லாத துஷ்டப்
பதர்களே! அசுரர் இடைப்பிறப்பீர்" என்னக்
கதத்துடனே சாபம் இட "ஹரி ஸ்மரணம் மறவாக்
கனம் தருவீர்! என வேண்டி வருந்தினர்
அன்றே.

"வைகுண்ட லோகத்தில் வசிக்கத்தகாத செயல்களை உடைய துஷ்டர்களான நீங்கள் இருவரும் அசுரப் பிறவியை அடையுங்கள் என்று ஸனகாதிகள் சபித்தனர். ஜயவிஜயர்கள் பயந்து, எங்களுக்கு ஸ்ரீமந்நாராயணனுடைய நினைவானது இருக்கும்படி அநுக்ரஹம் செய்ய ஸனகாதிகளை வேண்டினர்கள்.

11-5 ஸ்ரீ பகவான் ஸனகாதிகளுக்கு தரிசனம் அளித்தல்

ததேத தரஜ்ஞாய பவான வாப்த:
ஸஹைவ லக்ஷ்ம்யா பஹிரம்புஜாக்ஷ
கசேஸ்வராம் ஸார்பித சாரு பாஹு
ரானந்தயம் ஸ்தான பிராம மூர்த்யா.

செய்தியினை உய்த்துணர்ந்த செங்கமலக் கண்ண!
திருமகளுடன் கருடன் தோளதனி லேறி
மெய் திண்மை விளக்கிடு மாமுனிவரர் தம்முன்னே
மிக்க மனோகரமாக தோன்றினீர் அன்றே!

Koviloor Digital Library

ஹே தாமரைக் கண்ணனே! தாங்கள் இதை யறிந்து மஹாலக்ஷ்மியுடன் கூடவே, கருடன் தோளில் இருந்துக் கொண்டு, ஸனகாதிகள் பார்க்கத் தோன்றி னீரன்றோ !

11–6 ஸனகாதிகள் துதிகேட்டு, பகவான் அனுக்ரஹித்தல்

ப்ரஸாத்ய கீர்ப்பி: ஸ்துவதோ முனீந்த்ரான்
அனன்ய நாதாவத பார்ஷதௌ தௌ
ஸம்ரம்ப யோகேன பவைஸ்த்திரி பிர்மாம்
உபேத மித்யாத் தக்ருபம் ந்யகாதீ:

வந்து நினை துதி செய்யும் முனிவரர்கள் தம்மை
நலம் நிறைந்த சொற்களினுல் மகிழ்வுறச்செய்து
கந்து உடைய பகைவர்களாய் மூன்று பிறப் பெய்த
காவலரைப் பணித்திட்ட குருவாயூர்க்கண்ணு!

ஸ்தோத்திரம் செய்யும் ஸனகாதி முனிச்ரேஷ்டர் களை, நல்ல வார்த்தைகளால் அனுக்ரஹம் செய்தபின், காவலர்களான ஜயவிஜயர்கள் த்வேஷ மூலமான யோகத்தில் (மூன்று ஜன்மங்கள்) (1) கோபயோகம்: இரண்யகசிபு இரண்யாக்ஷன், (2) காமயோகம்: ராவ ணன் கும்பகர்ணன் (3) லோபயோகம்: சிசுபாலன் தந்தவக்கிரன் என இருந்து பின் வைகுந்தம் அடை யுங்களென உத்திரவிட்டீரல்லவா ?

11–7 ஜயவிஜயர்கள் திதியினிடத்தில் பிறத்தல்

த்வதிய ப்ருத்யா வத கஸ்ய பாத்தௌ
ஸுராரி வீரா வுதிதௌ திதௌ த்வௌ
ஸந்த்யாஸ முத்பாதன கஷ்ட சேஷ்டௌ
யமௌச லோகஸ்ய யமா விவான்யௌ.

Koviloor Digital Library

கிங்கரராய் ஜயவிஜயர் காஸ்யபர் திதியாம்
கர்ப்பத்தில் சந்தியினில் ஜனித்து வளர்ந்து
தங்(கு) உலகோர் பலரும் வருந்தி "யமன்" என்ன
தயித்தியர் நலம் பெருக தீச்செயலே பூண்டார்.

வைகுண்ட வாயில் காப்பாளரான ஜயவிஜயர்கள் தவறு செய்ததால் பதவியையிழந்து கச்யப ப்ரஜாபதிக்கு அவர் பத்தினி திதியினிடமாக தேவ சத்துருக்களில் சிறந்த வீரர்களாக, ஸந்தியா காலத்தில் ஜனித்து, கொடிய செயல்களை உடையவர்களாய், ஜனங்கள் "யமன்" என்று சொல்லும்படி ஸகலருக்கும் துக்கத்தைச் செய்து வந்தனர்.

11–8 இரண்யகசிபு இரண்யாக்ஷன் தீச்செயல்கள்

ஹிரண்ய பூர்வ: கசிபு: கிலக:
பரோ ஹிரண்யாக்ஷ இதி ப்ரதீத:
உபௌ பவந்நாத மசேஷ லோகம்
ருஷா ந்யருந்தாம் நிஜாவாஸனுந்தௌ.

எல்லை நிகர் இரண்யகசிபு இரண்யாக்ஷன் என்போர்
இரட்டையராய் வானவருக் கெதிரிகளாய் நின்று
வல்லமையால் அறிவிழந்து கோபத்தினுலே
வையமெல்லாம் துன்புறுத்தி சேஷ்டைகள் புரிந்தார்.

ஹிரண்ய கசிபுவும் ஹிரண்யாக்ஷனும் (ஸாதுக்கள் முன் சாபத்தால்) அஸுர வாஸனை யடைந்து, அறிவுக் கண்களை இழந்து, கோபத்தினுல், பகவானை அண்டிய பக்தர்களை யெல்லாம் துன்புறுத்தி வந்தார்கள்.

Koviloor Digital Library

11–9 ஹிரண்யாக்ஷன் பூமி தேவியை அபகரிக்கிறான்

தயோர் ஹிரண்யாக்ஷ மஹா ஸுரேந்த்ரோ
ரணய தாவன்னன வாப்த வைரீ
பவத் ப்ரியாம் க்ஷ்மாம் ஸலிலே நிமஜ்ய
சசார கர்வாத் வினதன் கதாவான்.

எதிராட எவரும் இன்றிக் கர்வத்தால் கூவி
எதிராஜ! உந்தன் ப்ரியமான பூதேவி தன்னைச்
சதிரான சமுத்திரத்தின் ஊடே புகுத்தித்
தண்டு, கதைதனைச் சுழற்றி சஞ்சரித்தான்
அன்றோ!

ஹிரண்யாக்ஷன் அஸுரர்களுக்குத் தலைவனாய் சண்டையிடுவதற்காக தேவர்களை அழைத்தும், பகைவர்களைக் காணுமல், பகவானுக்குப் ப்ரியமான பூமி தேவியை ஜலத்தில் அழுத்தி, கர்வத்தினால் கூச்சலிட்டுக் கொண்டு, கதாயுதத்தைக் கையில் பிடித்து யுத்தத்தை விரும்பியிருந்தான்.

ஹிரண்யாக்ஷன் ஸ்ரீ ஹரியைத் தேடினான்

11–10 ததோ ஜலேசாத் ஸத்ருசம் பவந்தம்
நிசம்ய பப்ராம கவேஷயம் ஸ்த்வாம்
பக்தைகத்ருஸ்ய : ஸ க்ருபாநிதே த்வம்
நிருந்தி ரோகான் மருதாலயேச

நீர்த்தேவன் வருணனால், நின் ஆற்றல் கேட்டு
நினைத்தேடித்திரிந்து யுத்த இச்சை கொண்
டான்
ஆர் பக்தர்? அவருக்கே காட்சி தரும் கண்ணா!
அரிய குருவாயூரா! ஆனநோய் நீக்குவையே!

Koviloor Digital Library

கருணைக்கடலே! வருணன் சாந்தனுய் "ஹரியைப் பாரும்" என்று சொல்ல, ஹிரண்யாக்ஷன் தனக்கு ஒப்பான ஹரியுடன் யுத்தம் செய்ய அவர் இருப் பிடத்தையறிய முயற்சித்தான்.

(அனைவரும் ஜல சம்பந்தமான ரோகங்களை விலக்கிக்கொள்ள இந்த பதினோராவது தசகத்தை பாராயணம் செய்ய வேண்டும்) 11-வது தசகம் முற் றிற்று. இதுவரை மொத்தம் 118 ச்லோகம்.

12-வது தசகம்

ஸ்ரீ வராஹ அவதாரம்

12-1 மனு பிரம்மதேவனை சரணடைகிறுர்

ஸ்வாயம்புவோ மனுரதோ ஜனஸர்க சீலோ
திருஷ்ட்வா மஹீமஸமயே ஸலிலே நிமக்னும்
ஸ்ரஷ்டாரமாப சரணம் பவதங்க்ரி ஸேவா
துஷ்டாஸயம் முனிஜனை: ஸஹ ஸத்ய லோகே.

அயன் ஆணை பெற்ற சுவாயம்பு மனுதானும்
அகாலத்தே நிலம் நீரில் மூழ்கியது கண்டு
ஜயமான முனிவருடன்; இக்கஷ்டம் போக்க
பணிந்து களிப்பெய்தும் பிரமன் அடி சார்ந்தார்

ஸ்வயம்புவான பிரம்மாவின் புத்ரர் மனு ஸ்வபாவ மாக ஜனங்களை ச்ருஷ்டி செய்பவர்; பூமி ஜலத்தால் நிறைந்ததைப் பார்த்து, இந்த ஆபத்தைப்போக்க, தன் ஸகாக்களுடன், பிரம்ம லோகத்தில் ஸதா ஹரியை

Koviloor Digital Library

சேவித்து ஸந்தோஷமாயிருக்கும் ச்ருஷ்டி கர்த்தாவான பிரம்ம தேவனை சரண் அடைந்தார்.

விசேஷ கருத்து: பகவத் சரணஸேவை செய்யும் ஞானிகளை நாடுவதே, துக்க நிவ்ருத்திக்கு உபாயம்.

12–2 மனு பிரம்மதேவனைப் பிரார்த்திக்கிறார்

கஷ்டம் ப்ரஜா: ஸ்ருஜதி மய்யவனீ நிமக்னா
ஸ்தானம் ஸரோஜபவ கல்பய தத் ப்ரஜானாம்
இத்யேவ மேஷ கதிதோ மனுனா ஸ்வயம்பூ
ரம்போருஹாக்ஷ தவ பாதயுகம் வ்யசிந்தீத்.

மலரவனே! பிரஜைகளை உண்டாக்கும்போது
மாநிலமே வாரியிடை மூழ்கியது ஏனோ!
தலம் இன்றி ஜீவ வர்க்கம் வளர வகையேது?
தலம் தருக என மனுவால் த்யானிக்கப்பட்டனர்.

செந்தாமரைக் கண்ண! நான் ஜீவராசிகளை உண்டு பண்ணும்பொழுது, பூமியானது முற்றிலும் மூழ்கிவிட்டது மிக வருத்தமாக இருக்கிறது. ஆகையால் ஜீவராசிகளுக்கு வாஸஸ்தானத்தை ஏற்படுத்த வேண்டுகிறேன் என்று மனு ப்ரம்மாவின் சரணங்களை த்யானித்தார்.

12–3 பிரும்மாவின் பிரார்த்தனை: வராஹ அவதாரம்

ஹா ஹா விபோ ஜலமஹம் ந்யபிபம் புரஸ்தா
தத்யாபி மஜ்ஜதி மஹீ கிமஹம் கரோமி
இத்தம் த்வ தங்க்ரி யுகளம் சரணம் யதோ ஸ்ய
நாஸா புடாத் ஸம்பவ: சிசுகோல ரூபீ

Koviloor Digital Library

"எங்கும் நிறைந்துள்ளோனே! மேலிட்ட ஜலத்தை
யான் பருகி இருந்தும் நிலம் தோன்றவில்லை
சங்கடங்கள் நீக்கி அருள்" என வேண்ட; நாசி
தனிலிருந்து பன்றி உரு எடுத்திட்டாய்
அன்றோ!

ப்ரபோ! நான் முன்னமேயே ஜலத்தைக் குடித்தேன். இன்னும் ஜலம் வடியவில்லை என்ன செய்வேன் என்று பிரும்மா தங்களுடைய சரண கமலங்களில் முறையிட்டார் அப்போது பிரும்மாவின் மூக்கிலிருந்து பன்றிக் குட்டியின் ரூபத்துடன் நீர் வெளிப்பட்டீரல்லவா?

கஷ்டங்கள் நேரும்போது பகவத் சரனத்தை த்யானம் செய்பவர்கள் விவேகிகள்; தெய்வத்தை நிந்திப்பவர்கள் மூடர்கள்.

12–4 வராஹமூர்த்தியின் வளர்ச்சி; பிரம்மாவின் ஆச்சர்யம்

அங்குஷ்ட மாத்ர வபுருத் பதித: புரஸ்தாத்
பூயோ பி கும்பி ஸத்ருஸ: ஸமஜ்ரும்ம
தாஸ்த்வம்
அப்ரே ததாவித முதீக்ஷ்ய பவந்த முச்சை:
விஸ்மேரதாம் விதிரகாத் ஸஹ ஸூனுபி:
ஸ்வை:

விரல் அளவில் தோன்றி யானை போலாகி
மேக மண்டலம் சேர விளங்கும் நினைப்பார்த்து
நிரலான புதல்வருடன் பிரம்மா வியப்பெய்தி
நிரதிசயானந்த களிப்புடனே துதித்தார்.

தாங்கள் முதலில் கட்டை விரலளவில் தோன்றி பின் யானையளவு வளர்ந்து விட்டீர், உயரமாக ஓங்கி

Koviloor Digital Library

வளர்ந்த தங்களை பிரும்மா தன் புத்திரர்களுடன் தரிசித்து ஆச்சர்யப்பட்டார்.

பரித்ராணாய ஸாதூனாம் விநாஸாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமியுகே யுகே.

என்பதற்கிணங்க, பெரிய ஆபத்துக்களிலிருந்து ஜீவராசிகளைக் காப்பாற்ற பகவான் தோன்றுவது தெளிக.

12–5 பவகத் மாயையில் பிரம்மா மயங்குகிறார்

கோ ஸாவ சிந்த்ய மஹிமா கிடிருத்திதோ மே
நாஸா புடாத் கிமு பவேதஜி தஸ்ய மாயா
இத்தம் விசிந்தயதி தாதரி ஸைல மாத்ர:
ஸத்யோ பவன் கில ஜகர்ஜித கோர கோரம்

மூக்கினிடையே தோன்றி மிகவளர்ந்த பன்றி
மூலமாம் விஷ்ணுவின் மாயா விசித்ரம்:
பார்க்குங்கால் பரவசமே என நினைந்த காலைப்
பயங்கரமாய் கர்ஜித்த குருவாயூர்க் கண்ணா!

என்னுடைய மூக்கிலிருந்து தோன்றி மிக மஹிமையுடன் விளங்கும் இந்தப் பன்றி எதுவாக இருக்கும்! ஒருவராலும் வெல்லப்படாத பகவான் மாயை விசித்ரமானது என்று வியந்து துதிக்க நீர் மலைபோல் தோன்றி, மிக பயங்கரமாக கர்ஜித்தீரல்லவா!

இந்த விசாலமான பிரபஞ்சத்தை உண்மையெனக் காட்டிவரும் பகவானுக்கு எல்லாம் ஸாத்யம் என்பது விளங்கிற்று.

Koviloor Digital Library

12-6 வராஹமூர்த்தி ஜலத்திற்குள் பிரவேசிக்கிறார்

தம் தே நிநுதமுபகர்ண்ய ஜனஸ்தபஸ்தா:
ஸத்யஸ்தி தாஸ்ச முனயோ நுநுவுர் பவந்தம்
தத் ஸ்தோத்ர ஹர்ஷுலமநு: பரிணத்ய பூய:
தோயாசயம் விபுல மூர்த்தி ரவா தரஸ்த்வம்

குரல் ஒலி கேட்டஞ்சலியால் ஜனலோகத்தாரும்
குன்றுத தவசிகளும் ஞானிகளும் சேர்ந்து
குரல் வழுத்தக் கடலினிடை பேருருவத்துடனே
குதித்தலைகள் நிலைகுலையக் குலவினீரன்றோ!

தங்களுடைய கர்ஜனையாகிற ஓசை, ஜனோ லோகத்திலும், தபோ லோகத்திலும் ஸத்ய லோகத்திலுமுள்ள ஜனங்கள் சித்தர்கள் ஞானிகள் அனைவரையும் ஸ்துதிக்கச் செய்து ஸந்தோஷத்தை உண்டுபண்ணியது. தாங்கள் இன்னும் பெரிய ரூபத்துடன் ஸமுத்திரத்தில் பிரவேசித்தீரல்லவா? ஹ்ருதய குகையில் பகவத்யானம் செய்பவர்கள் உலக ஆபத்துக்களைப் போக்க பகவான் தக்க உருவெடுக்கும் போது வெளியிலும் ஸ்துதிப்பார்கள் என்பது காண்க.

12-7 ஸ்ரீவராஹமூர்த்தி ஜலத்தில் முழ்கிய பூமியைத் தூக்க ஜலத்துள் பிரவேசிக்கிறார்

ஊர்த்வப்ரஸாரி பரிதூம்ர விதூதரோமா
ப்ரோக்ஷிப்த வாலதி ரவாங்முக கோர
கோணா:
தூர்ணப்ரதீர்ண ஜலத: பரிகூர்ண தக்ஷ்ணா
ஸ்தோத்ரூந் முனீன் சிசிரயன் அவதேரித
த்வம்

Koviloor Digital Library

செம்மையொடு கருமை நிற ரோமங்கள் ஓங்க
செந்தூக்காம் வால்நீட்டி, மோப்பத்தால்
சும்மையென பூமியின் அடிசேர்ந்து தூக்க
துதிப்பார்கள் மனம்குளிரக் கடல் ஆடினீரே !

தாங்கள், மேல் நோக்கிய கருப்பு சிகப்பு நிறமுள்ள ரோமங்களுடன், மேலே தூக்கப்பட்ட வாலுடன், மோப்பத்தால் பூமியை நோக்கி பரங்கரமான மூக்கைச் செலுத்தி, மேகங்கள் சிதறவும், துதிக்கும் முனிவர்கள் மனங்குளிரவும் கடாக்ஷித்து ஜலத்திற்குள் இறங்கினீரல்லவா? பகவான் எந்த ரூபத்தைத் தரித்தாலும் துதிக்கும் பக்தர்களை அநுக்ரஹபிப்பது ஸ்வபாவமாகிறது.

12–8 ஸமுத்திரராஜன் சரணமடைகிறுர்

அந்தர் ஜலம் ததனு ஸங்குல நக்ர சக்ரம்
ப்ராம் யத்திமிங்கில குலம் கலுஷோர் மிமாலம்
ஆவிஸ்ய பீஷணரவேண ரஸாதவஸ்தான்
ஆகம்பயன் வஸுமதீம் அகவேஷய: த்வம்

குரலாலே திமிங்கிலங்கள் முதலே ஜலவாசி
குலேந்தோட, ஜலராஜன் எதிர்கொண்டழைக்க
நிரலான முத்தேவிமாரில் நடுவான
நிலமகளை மேல் தூக்க நீந்தினுயன்றே !

நிரம்பிய முதலைக் கூட்டத்தையும் திமிங்கிலங்களின் கூட்டத்தையும் விரட்டி, ஸமுத்திரத்தைக் கலக்கிய பயங்கர சப்தத்தால் ஜலலோக வாசிகள் நடுங்கினுர்கள். ஜலத்தில் பூமியைத் தேடிய தங்களை ஸமுத்ரராஜன் சரண் அடைந்தார்.

Koviloor Digital Library

12–9 பூமியை வராஹமூர்த்தி தூக்குகிருர்

த்ருஷ்ட்வாத தைத்ய ஹதகேன ரஸா தலாந்தே
ஸம்வேஸிதாம் ஜடிதி கூட கிடிர் விபோத்வம்
ஆபாதுகான் அவிகணய்ய ஸுராரி கேடான்
தம்ஷ்ட் ராங்குரேண வஸுதாமமகதா: ஸலீலம்

பாதலத்தின் அருகினிலே பூமியினைக் கண்டு
பயங்கரமாய் கோரப் பற்களால் தூக்கச்
சூழ்வலத்தர் அசுரர்தமை லட்சியம் செய்யாதே
சுகமாகப் பூமியினைத் தூக்கினுயன்ருே!

அல்பனுன இரன்யாக்ஷனுல் ரஸாதலத்தின் மத்தியில் வைக்கப்பட்ட பூமியை தாங்கள் பார்த்து எடுக்கையில், எதிர்த்து வந்த அஸுரர்களை அனுயாசமாய் பற்களால் வதைத்தீர்களல்லவா?

மஹாபலிஷ்டனுன ஹிரண்யாக்ஷன், மிகச் சிரமப்பட்டு ரசாதலத்திற்குக் கொண்டுபோன பூமியை பகவான் அனுயாஸமாக திரும்பப் பெற்ருர்.

12–10 பகவான் பூமியை யதாஸ்தானத்தில் நிறுத்தல்

அப்யுத்தரன்னத தராம் தசனுக்ர லக்ன
முஸ்தாங் குராங்கித இவ அதிகபீவ ராத்மா
உத்தூத கோரஸலிதாத் ஜலதே: உதஞ்சன்
க்ரீடா வராஹவபு: ஈஸ்வர பாஹி ரோகாத்.

ஆலேப்போல் பருத்திட்ட உடலுடனே வாரி
தனில் மூழ்கி வெளிவந்த அச்சுதனே! முன்செய்
தீவினையால் நோயுற்ற தீனர்களை யெல்லாம் உன்
குளிர்ந்த நோக்கால் குறைபோக்கி யாள்வாயே.

Koviloor Digital Library

விளையாட்டாக பன்றியுருவெடுத்த ஹே குருவாயூரப்பா! கோரைப் பற்களால் பூமியை தூக்கிக்கொண்டு வந்த மிகப் பருத்த சரீரம், சோகமாகிற ஸமுத்திரத்தில் ஜீவராசிகள் மூழ்காமல் எப்பொழுதும் காப்பாற்ற வேண்டும்.

ஸ்ரீ நாராயணீயத்தில் வராஹவதாரத்தைக் கூறும் 12-வது தசகத்துடன் ஸ்லோகங்கள் 128.

"ஸ்வஸ்த்யஸ்து விச்வஸ்ய கல: ப்ரஸீததாம்"

கண்ணா! இந்த பகவத் கைங்கர்யத்தை ஏற்று உலகம் க்ஷேமமாக இருக்கவும் துஷ்டன் நல்லவனாகவும் அருள் புரியவேண்டும். ஸகல ஜனங்களுக்கும் தர்மம் செய்வதில் ஊக்கம் அளிக்க வேண்டும்.

பாகம்.	ஸ்ரீ நாராயணீயம் (உரையுடன்)			
(1)	1-வது தசகம் முதல்	10-வது தசகம் வரை		ரூ. 1
(2)	1. ,,	20	,,	ரூ. 1
(3)	2. ,,	30	,,	ரூ. 1

வி. பி. அனுப்ப ரூ. 1 அதிகம்

ஸச்சிதானந்தம்.

ஸ்ரீ சங்கரஸத்குரு சேவஸ்ரமம்,

22, பிச்சு பிள்ளை சந்து, மைலாப்பூர், மதராஸ்-4.

Koviloor Digital Library

ஸ்ரீ நாராயணீயம்

13-வது தசகம்

இரண்யாக்ஷ யுத்தவர்ணனம்

13–1 நாரதர் இரண்யாக்ஷனுக்கு உபதேசிக்கிறார்

ஹிரண்யாக்ஷம் தாவத் வரதபவதன் வேஷணபரம்
சரந்தம் ஸாம்வர்த்தே பயஸி நிஜஜங்கா பரிமிதே
பவத் பக்தோ கத்வா கபட படுதீர் நாரதமுனி:
ஸனைருசே நக்தந்தனுஜமபி நிந்தம் ஸ்தவ பலம்.

முழங்காலின் அளவான பிரளய ஜலத்தில்
முதல்வா! நினைத்தேடும் இரண்யாக்ஷன்
பழங்கால நாரதமாமுனியைக் காண
நினைத்தாழ்த்தி அவன் புகழைப் பேசச் செய்தீர்.

வேண்டிய வரங்களையளிக்கும் கண்ணா! தன் முழங்காலளவுள்ள ப்ரளய ஜலத்தில் தங்களைத் தேடியலைந்த ஹிரண்யாக்ஷனை, நாரதமுனி பார்த்து வஞ்சனையாய் தங்கள் பலத்தை தாழ்த்தி, அஸுர பலத்தை உயர்த்திப் பேச வைத்தீரல்லவா?

13–2 ஹிரண்யாக்ஷன் ஸ்ரீ பகவானைக் கண்டான்

ஸமாயாவீ விஷ்னுர்ஹரதி பவதீயாம் வஸுமதீம்
ப்ரபோ கஷ்டம் கஷ்டம் கிமிதமிதி தேனுபி கதித:
நதன் க்வாஸௌ க்வாஸாவிதி ஸமுனினா தர்சித பதோ
பவந்தம் ஸம்ப்ரா பத்தரணி தரம்
உத்யந்தம் உதகாத்.

Koviloor Digital Library

ஸ்ரீ நாராயணீயம் 2-ம் பாகம்

13-2 உன்னுடைய பூமியினை மாயா விஷ்ணு
அபகரித்தார் எனச்சொன்ன முனியை நோக்கி
என்னுரைத்தாய் விஷ்ணு எங்கே காட்டு என்ன
ஹிரண்யாக்ஷன் உனை நாடச் செய்தாயன்றோ!

நாரதர் ஹிரண்யாக்ஷனைப் பார்த்து ப்ரபோ! மாயாவியான விஷ்ணு உம்முடையதான பூமியை அபகரித்துச் செல்லுகிறார்! இது என்ன கஷ்டம் என்று சொல்ல, ஹிரண்யாக்ஷன் விஷ்ணு எங்கே என்று அதட்டிக் கேட்க, நாரதமுனிவரால் வழிகாட்டப்பட்டு, பூமியை பாதாளத்திலிருந்து தூக்கி வெளிவரும் தங்களை ஹிரண்யாக்ஷன் பார்த்தானல்லவா?

13-3 ஸ்ரீ பகவான் ஹிரண்யாக்ஷனுடன் யுத்தம் செய்கிறார்.

அஹோ ஆரண்யோயம் ம்ருக இதி ஹசந்தம்
பஹுதரை:
துருக்தைர் வித்யந்தம் திதிஸுத மவக்ஞாய
பகவன்
மஹீம் த்ருஷ்ட்வா தம்ஷ்ட்ராசிரஸி சகிதாம்
ஸ்வேன மஹஸா
பயோதாவாதாய ப்ரஸப முதயுங்க்தா ம்ருத
விதௌ.

பல்லினிடை நடுக்கமுறும் பூதேவி தன்னைப்
பயம் நீக்கிச் சமுத்திரத்தே பண் பாய்
வைத்துச்
சில் மொழியால் காட்டுவிலங்கென கேலி செய்த
ஹிரண்யாக்ஷன் நடுங்கப் போர் முனைந்தா
யன்றோ !

திதியின் பிள்ளையான ஹிரண்யாக்ஷன் தங்களை கெட்ட வார்த்தைகளால் பரிஹஸித்து, காட்டில் வசிக்

Koviloor Digital Library

கும் மிருகத்தை வதைப்பதைப்போல லக்ஷ்யம் செய்யாமல், அடிக்க வருகையில், தங்கள் பல்நுனியில் இருந்த பூதேவியை தங்கள் மாயையால் ஜலத்தில் மூழ்காமல், ஸ்முத்திரத்தில் மிதக்கும்படி வைத்து சண்டை விரும்பிய ஹிரண்யாக்ஷனுடன், பலாத்காரமாக சண்டை செய்ய முனைந்தீரல்லவா?

13-4 ஸ்ரீபகவானும் அஸுரனும் த்வந்த்வ யுத்தம் செய்தனர்

கதாபாணௌ தைத்யே த்வமபி க்ருஹீதோன்னதகதோ
நியுக்தேன க்ரீடன் கடகட ரவோத் குஷ்டவியதா
ரணு லோகௌத் ஸுக்யாத் மிலதி ஸுரஸங்கே த்ருதம் அமும்
ந்ருந்த்யா: ஸந்த்யாத: ப்ரதமமிதி தாத்ரா ஜகதிஷே.

கையினிலே கதை ஏந்தி ஆர்ப்பரித்து வானில்
"கடகட" என்(று) ஒலிமுழங்க சமர் செய்போதில்
மையிருள் சேர், சந்திவரு, முன்கொல்க என்று
மலரயனும் தேவர்களும், துதித்தாரன்றோ!

ஹிரண்யாக்ஷன் கையில் கதை ஏந்தி தங்களை அடிக்க வருகையில், தாங்களும் யோக சக்தியால் கையில் பெரிய கதையை எடுத்து கடகட என்று விண்ணதிரும்படி த்வந்த்வ யுத்தத்தால் விளையாடுகையில், தேவர்களின் கூட்டத்தால், ஸந்தியாகாலத்திற்கு முன்னதாகவே ஹிரண்யாக்ஷனை வதைக்கும்படி பிரார்த்திக்கப் பட்டீர் அல்லவா?

Koviloor Digital Library

13–5 ஸ்ரீ பகவான் சக்ராயுதம் எடுக்கிறார்

கதோந்மர்தே தஸ்மிம்ஸ்தவ கலு கதாயாம்
திதிபுவோ
கதாகாதாத் பூமௌ ஜடிதி பதிதாயாம்
அஹஹ போ:
ம்ருதுஸ்மேரஸ்ய: த்வம் தனுஜகுத நிர்மூல
நசணம்
மஹாசக்ரம் ஸ்ம்ருத்வா கரபுவி ததானோ
ருருசிஷே.

இரண்யாக்ஷன் கதையால் நினது கதைவீற
இன்னிலத்தில் அவன் மடிய இன்முகம்
கொண்டே
சர்வ ஹர சக்கரத்தை ஸ்மரித்து வரச்செய்து
தாமரைக் கைதனிலே ஏந்தி நின்றாயன்றோ!

கதாயுத்தம் செய்து புன்சிரிப்புடன் கதையை நழுவ விட்டு, ஹிரண்யாக்ஷனை ஸம்ஹரிக்கவல்ல சக்ராயுதத்தை ஸ்மரித்து, கையில் தரித்தவராய் ப்ரகாசித்தீரல்லவா?

ஹிரண்யாக்ஷனுடைய யுத்த தர்மத்தைப் பகவான் மெச்சுகிறார். அவனுடைய பலத்தை இழுக்க வல்ல, சுதர்சன சக்கிரத்தை சுற்றி காட்சியளிக்கிறார்.

13–6 ஹிரண்யாக்ஷன் மாயையைப் பிரயோகிக்கிறான்

தத: சூலம் காலப்ரதி மருஷி தைத்யே விஸ்ருஜதி
த்வயி சிந்தத்யேனத் கரகலித சக்ரப்ரஹரணாத்
ஸமாருஷ்டோ முஷ்ட்யாஸ கலு விதுதன் த்வாம்
ஸமதனோத்
கலன்மாயே மாயாஸ்த்வயி கில ஜகன்
மோஹனகரீ:

Koviloor Digital Library

சக்கரத்தால் அஸுரன் சூலத்தை முறித்தாய்:
முஷ்டியினுல் நின்மார்பில் அடி கொடுத்து மறைந்து
உக்கிரமாய் மாயைகள் உண்டாக்க நீயும்
மாயையற்ற யோகத்தால் தாழ்த்திஞயன்றோ!

காலனுக்கு ஒப்பான கோபத்தையுடைய ஹிரண்யாக்ஷன், சூலத்தை ஏவியபொழுது தாங்கள் கையில் உள்ள சக்ராயுதத்தால் சூலத்தை துண்டித்தீரல்லவா? அசுரன் மேலுங்கோபம் மூண்டு லோகங்களை மயக்கும் மாயங்களை, தங்கள் மீது ஏவினனல்லவா ?

13–7 ஸ்ரீ பகவான் ஹிரண்யாக்ஷனை வதம்செய்கிறுர்

பவச்சக்ர ஜ்யோதிஷ்கண லவநி பாதேன விதுதே
ததோ மாயா சக்ரே விததகன ரோஷாந்த மனஸம்
கரிஷ்டாபி: முஷ்டி ப்ரஹ்ருதிபி: அபிக்னந்தம் அஸுரம்
கராக்ரேண ஸ்வேன ச்ரவண பதமூலே நிரவதீ:
லவலேசத்தீப்பொறியால் மாயைக் கூட்டங்கள்
நசித்திடவே கடுஞ்சினத்தால் கைமுஷ்டியாலே
சுவலாகத் தாக்குமவன் கன்னத்தின் கீழே
சுழியாகத் தாக்கி உயிர் துறக்க வைத்தாயன்றோ.

அஸுரனுடைய பலவித மாயைகளையும் தங்களுடைய சக்ராயுதத்தின் ஜ்யோதிஸால் ஒழித்து, நிர்பலமாக்க, அஸுரன் வெகுண்டு தங்களை முஷ்டியால் அடித்த பொழுது, ஹிரண்யாக்ஷன் காதின் அடிப்பாகத்தில் தாங்கள் கையின் நுனிவிரலால், அனாயாஸமாக அடித்து வதம் செய்தீரல்லவா?

Koviloor Digital Library

13–8 யக்ஞ வராஹமூர்த்தியை தேவர்கள் துதித்தனர்

மஹாகாய: ஸ: அயம் தவ கரஸரோஜ ப்ரமதித:
கலத் ரக்த: வக்த்ராத் அபதத் ரிஷிபி:
ச்லாஹித ஹதி:
ததாத்வாம், உத்தாம ப்ரமத பரவித்யோதி
ஹ்ருதயா:
முனீந்த்ரா: ஸாந்த்ராபி: ஸ்துதிபி: அனுவத்
அத்வரதனும்.

முனிவர்கள் புகழ்ந்தேத்த வாய் வழியே குருதி
மூரியுடன் பொங்கிவர அவன் வீழ்ந்தகாலை
நனி சிறந்த தோத்திரங்கள் பலகூறி யக்ஞ
நாயகனும் நினைப்பணிந்து நலமுற்றாரன்றே !

பெருத்த சரீரம் படைத்த ஹிரண்யாக்ஷன், தங்களுடைய மருதுவான கைகளினல் நசுக்கப்பட்டு, முகத்திலிருந்து ரத்தம் வழிய, மரணத்தை யடைந்தானல்லவா? அதனல் ரிஷிகள் சந்தோஷமடைந்து உரத்த வேத மந்திரங்களால், யக்ஞ மூர்த்தியாகிய தங்களை துதித்தார்களல்லவா ?

13–9 யக்ஞ வரரஹமூர்த்தியே பகவான்

த்வசி சந்தோ ரோமஸ்வபி குசகணஸ்சக்ஷுஷி
க்ருதம்
சதுர்ஹோ தாரோ ங்க்ரௌ ஸ்ருகபி வதனே
சோதர இடா
க்ரஹா ஜிஹ்வாயாம் தே பரபுருஷ கர்ணே ச
சமஸா:
விபோ ஸோமோ வீர்யம் வரத கலதேஸே ச
உபஸத:

சோமரஸம் ரேதஸ்ஸாம்; காயத்ரி சர்மம்
சுடர்முகமும் இடையும் பாத்ரங்கள்
நேமமுறு கண்ணில் நெய், ரோமத்தில் தர்ப்பம்
நிகழ்கின்ற கால்நான்கில் ரித்விக்கும் உண்டே.

Koviloor Digital Library

புருஷோத்தம! தங்களுடைய தோளில் காயத்ரி முதலிய சந்தஸ்ஸுகளும், ரோமங்களில் தர்ப்பை என்ற நாணற் கூட்டமும், கண்களில் நெய்யும், நான்கு கால்களிலும் நான்கு வித ரித்விக்குகளும், முகத்தில் ஹோம பாத்திரமும், வயிற்றில் இடை என்ற பாத்திரமும், நாக்கில் க்ருஹ பாத்திரங்களும், காதுகளில் மரத்தட்டுகளும், ரேதஸில் ஸோமரஸமும் பொருந்தி, பக்தர்களுக்கு இஷ்டமான வரங்களைக் கொடுக்கும் யக்ஞ வராஹ மூர்த்தியாய் பிரகாசித்தீரன்றோ!

13–10 ஸ்ரீ பகவான் வைகுண்டம் சேர்ந்தார்

முனீந்த்ரை: இத்யாதிஸ் தவனமுகரைர் மோதித
மனா:
மஹீயஸ்யா மூர்த்யா விமலதர கீர்த்யா ச
விலஸன்
ஸ்வதிஷ்ண்யம் ஸம்ப்ராப்த: ஸுகரஸவிஹாரீ
மதுரிபோ
நிருந்த்யா: ரோகம் மே ஸகலமபி வாதாலய
பதே.

மது அரக்கன் எதிரி எனும் குருவாயூர் கண்ணா
மாசற்ற கீர்த்திபொலி மாவடிவினோடே
பொது நிலை வைகுந்தம் சேர்ந்தின்பு துய்க்கும்
புண்ணியனே! நோய்விலக புகன்றிடுவா
யின்றே.

முனிச்ரேஷ்டர்கள் யக்ஞ ரூபியாக துதித்துக் கொண்டிருக்கையில், சந்தோஷமாகவும் பரிசுத்தமான மனதுடனும் பெருமையுடனும் புகழுடனும் தங்கள் ஸ்தானமான வைகுண்டத்தை யடைந்த குருவாயூர் கண்ணா! பிராணிகளை வருத்தும் ஸகல வியாதிகளையும் தங்களுடைய பார்வையாலும் ஆனந்த ரஸக்ரீடா விசேஷத்தாலும், உடனே போக்குவீராக.

Koviloor Digital Library

வைராக்கியம், பக்தி இவற்ருல் சுத்தப்படுத்தப்பட்ட மனதால் உணரப்பட்ட ஞானவடிவான பகவானுக்கு நமஸ்காரம்.

ஸ்ரீ நாராயணீயம்

14- வது தசகம்

ஸ்ரீ கபிலர் வரலாறு

14-1 மனுவால் ஸ்ரீவிஷ்ணுவின் மஹிமைகள் கூறப்படுகிறது

ஸ மனுஸ்ம்ருத தாவகாங்க்ரியுக்ம:
ஸமனு: பங்கஜ ஸம்பவாங்க ஜன்மா
நிஜக் அந்தரம் அந்தராயஹீனம் சரிதம்
தே கதயன் ஸுகம் நினய.

தடையொன்று மில்லாதே நின் சரிதம் சொல்லி
சரணங்கள் எப்போதும் த்யானம் செய்வா
ராய்க்
கடைமன் வந்தரம் வரையும் சுவாயம்பு மனுவாம்
கலையாளன் நற்காலம் கழிக்க வைத்தாயன்ரே!

பிரும்மாவின் புத்ரர், ஸ்வாயம்புவ மனு, தங்களுடைய திவ்ய சரணங்களை ஸதாத்யானம் செய்துக் கொண்டு, தங்களுடைய மஹிமைகளை நிஷ்காமமாக ப்ரவசனம் செய்தே எவ்வித இடையூறுமின்றி காலங் கழிக்கச் செய்தீரல்லவா ?

Koviloor Digital Library

மனுவே உலகின் ஆதிபுருஷர் உலகின் தலைவர். அவர் செய்த நற்காரியங்களின் பயனாய், உலகம் நல்ல வாஸனையும் அமைதியும் சந்தோஷமும் பூர்த்தியாக உள்ளதாயிருந்தது.

14-2 கர்தமர் உலகை ச்ருஷ்டிக்க தவம் செய்கிறார்

ஸமயேகலு தத்ர கர்தமாக்யோ
த்ருஹிணச் சாயபவ: ததீயவாசா
த்ருத ஸர்கரஸ: நிஸர்க ரம்யம்
பகவம் ஸ்த்வாமயுதம் ஸமா: ஸிஷேவே.

அக்காலே மலரோனின் நிழலில் உற்பவித்த
அருந்தவனும் கர்த்தமரும் அயன் ஆணையாலே
மிக்காய ச்ருஷ்டி செய்யப் பதினாயிரம் ஆம்
வியன் ஆண்டு நினைப் பணிந்து தவம் செய்தா
ரன்றோ!

பகவன்! அந்த க்ருதயுகத்தில் பிரம்மாவின் நிழலிலிருந்து உண்டான கர்தமர், தன் பிதாவின் உத்திரவின்படி, உலகங்களை ச்ருஷ்டி செய்ய வேண்டுமென்ற விருப்பத்துடன், இயற்கையாகவே அழகினால் பிரகாசிக்கும் தங்களை நீண்ட காலம் த்யானம் செய்ய வைத்தீரல்லவா?

14-3 பகவான் கருடன் மீதமர்ந்து காட்சியளிக்கிறார்.

கருடோபரி காளமேக கம்ரம்
விலஸத் கேளி ஸரோஜ பாணி பத்மம்
ஹஸி தோல்லஸி தானனம் விபோத்வம்
வபுராவிஷ் குருஷே ஸ்ம கர்தமாய.

Koviloor Digital Library

A. No. A133

தவம் செய்யும் கர்த்தமர்முன் கருடன் மீதேறி
தாமரை யேந்தும் கையால் அபயம் தந்து
நலம் செய்யும் புன்சிரிப்பால் மலர்ந்த முகத்தோடே
நயனேற்சவமாக எழுந்தருளினையால்.

ப்ரபுவான ஓ குருவாயூரப்பா! நீர் கருடன்மேல் இருந்து, நீருண்ட மேகம் போன்றதும் தாமரை போன்றதும் ம்ருதுவான கைகளில் தாமரைப் புஷ்பத் துடன், புன் சிரிப்புடன் பக்தராகிய கர்தமருக்கு காட்சி யளித்தீர் அல்லவா?

14-4 ஸ்ரீ பகவான் கர்தமருக்கு அநுக்ரஹம் செய்கிறர்

ஸ்துவதே புளகாவ்ருதாய தஸ்மை
மனு புத்ரீம் தயிதாம் நவாபி புத்ரீ:
கபிலன் ச ஸுதம் ஸ்வமேவ பஸ்சாத்
ஸ்வகதிம் சாப்யனுக்ருஹ்ய நிர்கதோபூ:

மயிர் சிலிர்த்துத் துதி செய்த கர்தமர் மகிழ
மனுமகளைத் துணையாக்கி மாகபிலன் தனையும்
பயிர் எழிலார் நவ மகளார்தமையும் வீட்டினையும்
பாவித்து மகிழ்வித்து பரமானய் அன்றே!

கர்தமர் தங்களை தரிசித்து நமஸ்கரித்து மயிர்கூச்ச லுடன் ஸ்தோத்ரம் செய்வதைக் கண்டு மகிழ்ந்து, பிரஜா சிருஷ்டியின் பொருட்டு அவருக்குப் பத்னியாக மனுபுத்திரியான தேவஹூதியையும், சந்ததியாக ஒன்பது பெண்களையும், தங்களுடைய அம்சமாக கபிலர் என்ற பிள்ளையையும் அடையும்படி அநுக்ரஹம் செய்து முடிவில் ஸ்வகதியான பேரின்பத்தையும் குறித்தீ ரல்லவா?

Koviloor Digital Library

14-5 மனு, மனைவியோடும், புத்திரியோடும் கர்த்தரை சந்திக்கிறார்.

ஸ மனு ; சதரூபா மஹிஷ்யா
குணவத்யா ஸுதயா ச தேவஹூத்யா
பவ தீரித நாரதோப திஷ்ட ;
ஸமகாத் கர்தமம் ஆகதி ப்ரதீக்ஷம்.

நாரதருல் பணித்தபடி சுவாயம்பு மனுவும்
நல்லாள் தன் மகிஷி யெனும்
சதரூபையோடும்
தேரழகார் கன்னிமகள் தேவஹூதி யுடனும்
சீர்முனி கர்தமரிடத்தில் சென்றிட்டா றன்றோ!

(ஏழு த்வீபகங்களுக்கும் அதிபதியான) மனு, தங்களால் ஏவப்பட்ட நாரதர் சொல்லைக் கேட்டு, தன் பட்ட மஹிஷியான சதரூபையோடும், நற்குணம் படைத்த பெண் தேவஹூதியோடும் (தங்கமயமன தேரில்) சென்று, தங்கள் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்த கர்தமரை சந்தித்தார்.

(அடக்கமாக ஆடம்பரங்களின்றி பெண்ணுடன், பிள்ளை வீட்டையடைந்து விவாகம் செய்து கொடுத்தலே ஆதிகாலப் பழக்கம் என்பதுணர்க.)

14-6 கர்தமர் தேவஹூதியை மணம் செய்கிறார்.

மனுனு உபஹ்ருதாம் ச தேவ ஹூதிம்
தருணீரத்னம் அவாப்ய கர்தமோஸௌ
பவதர்ச்சன நிர்வ்ருத : அபி தஸ்யாம்
த்ருட சுச்ரூஷணயா ததௌ ப்ரஸாதம்

Koviloor Digital Library

கர்த்தமரும், மனு அளித்த, தேவஹூதி என்னும்
காதலியைக் கைபிடித்துக் கால மெல்லாம்
நின்னை
அருத்தியுடன் வழிபட்டு நின்மதி அடைந்தே
அருங்கலமாம் மனையிடத்தில் அன்பு
செய்தனரால்.

கர்தமர், மனுவினால் அழைத்து வரப்பட்ட உத்தமப் பெண்ணான தேவஹூதியை விவாகத்தினால் கிரஹித்து, அவளால் செய்யப்பட்ட பணிவிடைகளால் சந்தோஷித்து, வைராக்யம் அடைந்தவராயிருந்தும், அவள் அன்பிற்கு ஈடுபட்டவரானார்.

14-7 கர்தமரும் தேவஹூதியும் போகங்களை அனுபவித்தனர்

ஸ : புன : த்வதுபாஸன ப்ரபாவாத்
தயிதா காமக்ருதே க்ருதே விமானே
வனிதா குலஸங்குல : நவாத்மா
வ்யஹரத் தேவபதேஷு தேவஹூத்யா.

மாயவனே ! நின் பாதம் எப்போதும் ஏத்தும்
மஹிமையினால் நவமாக யௌவனம் பெற்றுத்
தாயமணி மானத்தே அர மகளிர் சூழத்
தரணியொடு வானமெலாம்
சஞ்சரித்தாரன்றோ !

ஹே குருவாயூர் கண்ணா ! தங்களை வெகுகாலம் உபாஸித்ததின் பயனாக, மறுபடி கர்தமர், மனைவியின் விருப்பத்திற்காக, தேவ விமானத்தில் வித்யாதர ஸ்திரீகளால் பணிவிடை செய்யப்பட்ட தேவஹூதியோடு தானும் யௌனவன புருஷனாய், தேவ மார்க்கங்களில் சென்று போகங்களை யனுபவித்தார்.

Koviloor Digital Library

14-8 நவ கன்னிகைகளின் உற்பத்தி

சதவர்ஷமத வ்யதீத்ய ஸோயம்
நவ கன்யா : ஸமவாப்ய தன்யரூபா :
வனயான ஸமுத்யதோபி காந்தாஹிதக்ருத்
த்வஜ்ஜன னேத் ஸுக : ந்யவாத் ஸீத்,

நூருண்டு இவ்வண்ணம் வாழ்ந்(து)
ஓன்ப தென்னும்
நுண்ணிடையார் மகளிர்தமை பெற்றுப்
பற்றற்றுக்
கூடுண்ட பத்தினிக்கு இதம் செயற்காய் நின்று
கோலங்களில் ஆசைகொண்டு குலவினனே !

கர்தமர், நூறு வருஷகாலம் போகங்களை யனுபவித்து சிறந்த ரூபமும் குணமும் உள்ள (1) கலை (2) அநஸூயை (3) ச்ரத்தை (4) ஹவிர்பூ (5) கதி (6) க்ரியை (7) க்யாதி (8) அருந்ததி (9) சாந்தி என்னும் பெண்களையடைந்து, பின் ஸன்யாஸம் பெற முயன்ருர்; மறுபடி தேவஹூதியால் பிரார்த்திக்கப்பட்டு, தாங்கள் கபிலராக அவதாரம் செய்வதை எதிர் பார்த்திருந்தார்.

14-9 ஸ்ரீ பகவான் கபிலராக அவதரிக்கிருர்

நிஜபர்த்ரு கிரா பவந்நிஷேவா
நிரதாயாம் அததேவ தேவஹூத்யாம்
கபில: த்வம் அஜாயதா: ஜனும்
ப்ரதயிஷ்யன் பரமாத்ம தத்வ வித்யாம்,

பின்னை இருபத்து நான்கெனும் தத்துவாதார
பேராத்ம ஞானப் பிரகாசம் பெறவேண்டி
தன்னை யருச்சித்த தேவஹூதி மகிழ்வெய்த
கபிலர் உருவேற்று தோன்றினீரன்ருே !

Koviloor Digital Library

ஹே குருவாயூரப்பா ! பிறகு தங்கள் கட்டளைப் படி ப்ரீதியுடைய தேவஹூதியினிடத்தில், கர்தமர் சேர ஸகல ஜனங்களுக்கும் பரமாத்மாவினுடையவும், அதன் சக்திகளாகிற இருபத்து நான்கு தத்துவங்களுடையவுமான அறிவை, ப்ரகாசப்படுத்துவதற்காக, தாங்கள் கபிலராக அவதரித்தீர்களல்லவா ? கர்தமரிடம் உபதேஸம் பெற்று, தேவஹூதி பரமாத்மத்யானமும், ஸாதுக்களுக்குத் திரவியதானமும் செய்ததனின் பயனுய் பகவானையே பிள்ளையான கபிலராகப் பெற்ருள் என்பது தெளிக.

14-10 கர்தமர் ஸந்யாஸம் பூண்டு, கபிலரை தேவஹூதிக்கு உபதேசிக்க வேண்டுகிருர்.

வனமேயுஷி கர்தமே ப்ரஸன்னே
மதஸர்வஸ்வம் உபாதிசன் ஜனன்யை
கபிலாத்மக வாயுமந்திரேச
த்வரிதம் த்வம் பரிபாஹிமாம் கதௌகாத்.

கர்தமர் தான் மகிழ்வுடனே ஸன்யாஸம் பூண்டு
நிலை சேரும் சித்தாந்தம் தாய்க்கு உரை என்ருர்;
வருத்தியுடல் தன்பிடிப்பில் ஆட்டிவைக்கும் நோயை
ஓட்டுவாய் ! அருள்வாய் ! உயர் குருவாயூரா!

ஒன்பது பெண்களையும் (1) மரீசி (2) அத்ரி (3) அங்கிரஸ் (4) புலஸ்த்யர் (5) புலஹர் (6) க்ரது (7) ப்ருகு (8) வசிஷ்டர் (9) அதர்வா என்பவர்களுக்கு வேதமுறைப்படி விவாகம் செய்து கொடுத்துவிட்டு சன்யாஸம் பூண்டு, வனம் செல்லும்போது கபிலரை (பரமாத்ம ஸ்வரூபத்தில்) வணங்கி, தேவஹூதிக்கு ஸாதன ஸாத்ய ஞானங்களை விளக்கும்படி கேட்டுக் கொண்டார், கபிலராக அவதரித்த குருவாயூரப்பா ! ரோகக் கூட்டங்களை விலக்கி, ஸகலருக்கும் அழிவில்லாத ஸன்யாஸத்தில் விருப்பை உண்டு பண்ணுவீராக.

14-வது தசகம் முற்றிற்று. இதுவரை மொத்த ச்லோகங்கள் 148.

Koviloor Digital Library

ஸ்ரீ நாராயணீயம்

15-வது தசகம்

15-1 ஸ்ரீ கபிலர் தன் தாய்க்கு பக்தியின் பெருமையை உபதேசிக்கிறுர்.

மதிரிஹ குணாஸக்தா பந்தக்ருத் தேஷ்வஸக்தா
த்வம் அம்ருத க்ருத் உபகுந்தே பக்தி
யோகஸ்து ஸக்திம்
மஹதனு கமலப்யா பக்தி அத்ரைவ ஸாத்யா
கபிலதனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

விஷய சுகங்களில் ஈடுபட்ட புத்தி பந்தம்
விளைத்திடுமால்; பற்றற்ற பக்தி ஒன்றே
தடயமிலா மோட்சத்தைத் தந்திடுமால், அது
வேண்டி
மஹான்களைச் சேரல் லக்ஷ்யம் என சாற்றினு
யன்றே !

"இவ்வுலகத்திலுள்ள பொருள்களின் மீது ஆசை ஏற்பட்டு ஜன்மாவைக் கொடுக்கிறது; பொருள்களின் மீது ஆசையில்லா நிலையே ஸ்வயம்பிரகாச பரமான்ம நிலையை உணரச் செய்கிறது; அத்தகைய பக்தியினுல் பொருள்களின் மீதுள்ள பற்றுகள் விலக்கப்படுகிறது, மஹான்களுடன் சேர்க்கை விரும்பப்படுகிறது. இவ்வுலகில் மட்டுமே சாத்யமானது" என்று தங்கள் தாயான தேவ ஹூதிக்கு அனன்ய பக்தியின் பெருமையை உபதேசித்தீரல்லவா?

15-2 பரமாத்மாவை இந்த சரீரத்திலேயே ஆதாரமாய் அறிய வேண்டிய முறையை உபதேசிக்கிறுர்.

ப்ரக்ருதி மஹதஹங்காராஸ்ச மாத்ராஸ்ச பூதா
ந்யபி ஹ்ருதபி தசாக்ஷீ பூருஷ: பஞ்சவிம்ச:

Koviloor Digital Library

இதி விதித விபாக: முச்யதே அஸௌ ப்ரக்ருத்யா
கபிலதனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

பூதம் ஐந்து தன்மாத்ரை ஐந்து மஹத்
பிரகிருதி அகம் மனம்; ஞானேந்திரிய
கர்மேந்திரிய வாசல் உடன் கூட ஜிவனும் என்றும்
அசங்க நிலே சுத்தமாம் ஸ்வயம் ஜோதி
யென்றும்.

(1) ப்ரக்ருதி (2) மஹத் (3) அஹங்காரம் (4) கந்தம் (5) ரஸம் (6) ரூபம் (7) ஸ்பர்சம் (8) சப்தம் (9) பூமி (10) ஜலம் (11) தேஜஸ் (12) வாயு (13) ஆகாசம் (14) மனம் (15) கண் (16) காது (17) நாக்கு (18) மூக்கு (19) தோல் (20) வாக் (21) கை (22) கால் (23) விஸர்ஜனஸ்தானம் (24) சுகஸ்தானம் என்னும் 24–ன் சேர்க்கையால் புருஷன் ஜீவனுகிருன்; இவைகளின் சம்பந்தமற்றவன் எங்கும் எப்போதும் எதிலும் தடையின்றி வியாபிக்கும் ஸ்வயம் ஜோதியான புருஷனே என்று 5-வது வயதிலேயே தாயான தேவஹூதிக்கு உபதேசித்தீரல்லவா?

15-3 தேஹத்தின் தோஷங்கள், தேஹாதாரமான ஆத்மாவிற்கு இல்லே எனும் தெளிவு.

ப்ருகிருதி கதகுணௌகை: நாஜ்யதே பூருஷோயம்
யதி து ஸஜதி தஸ்யாம் தத்குணஸ்தம்
பஜேரன்
மதனுபஜன தத்வாலோசனை; ஸாபி அபேயாத்
கபிலதனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

கர்த்ருத்வம் முதலான தேஹ தர்மம் முழுதும்
ஆத்மாவின் ஒளிவாயில்; விஷயவாசனை
சேர அடைபட்டு ஒளி தோன்ரு; ஆதலினுல்
அசங்க நிலே ஒன்றே சமாதி என்றனையால்

Koviloor Digital Library

"இந்த ஆத்மா, சரீரத்தின் 24 தர்மங்களாலும் சம்பந்தத்தை யடைய விடாமல் காப்பதே புருஷதர்மம்; இதனுலே ஜீவன் முக்தி விதேக கைவல்யம் ப்ராப்த மாகும்; தவறினல் அபிமான மூலம் தேஹ தர்மங்கள் 24 த்வாரங்களையும் அடைத்து அணைந்த விளக்குபோல் இருண்டுவிடும், சரீரத்தில் வைத்த 24 ஸாதனங்களை யும் பகவத் தரிசன விஷயமாகவே உபயோகப்படுத்த வேணடும்; அக்ஞான நீக்கம் பயன் என்று உபதேசம் செய்தீரல்லவா ?

15-4 பகவானை த்யானம் செய்யும் கிரமம்

விமலமதி: உபாத்தை: ஆஸனுத்யை: மதங்கள்
கருடஸமதிரூடம் திவ்ய பூஷாயுதாங்கம்
ருகிதுலித தமாலம் சீலயேத் அநுவேலம்
கபில தனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ :

இயமநியமத்தாலே தூய்தாம் அந்தக்கரணம்
இருக்கை, பிராணுயாமம்; தாரணை சாதனத்தால்
சுயமான ஒளி அணிகள், ஆயுதங்கள் சூடும்
ஸர்வமுமாய் த்யானிக்க சமாதி கூடும் என்றீருல்

(1) யமம் (2) நியமம் (3) ஆஸனம் (4) பிராணு யாமம் (5) ப்ரத்யாஹாரம் (6) தாரணு (7) த்யானம் இவைகளாகிற யோக அப்யாஸத்தால் உடல், மனது, இந்திரியங்கள் ஜீவன் ஆகியவற்றை சுத்தமாக்கிக் கொண்டு, ஆத்மம் வைகுண்டத்திலுள்ள என் ரூபமே, எங்கும் நிறைந்திருப்பதாகவும் கருடன்மீது (புருவ மத்தியிலும்) தோன்றுவதாயும், திவ்யமான ஆப ரணங்களையும், ஆயுதங்களையும் பூண்டதாயும், துதிப் பவர் மனஸில் ஞான ஒளியை உண்டு பண்ணுவதாக வும் இடைவிடாத 8 வது ஸமாதி நிலைக்காக த்யானம் செய்யவேண்டுமென்று தாய்க்கு உபதேசித்தீரல்லவா ?

Koviloor Digital Library

15 - 5 ஜனன மரண பயம் விலகும்வழி

மம குண கண லீலா கர்ணனை : கீர்த்தனுத்யைர்
மயி ஸுரஸரிதோக ப்ரக்ய சித்தானுவ்ருத்தி:
பவதி பரம பக்திஸ்ஸாஹி ம்ருத்யோர் விஜேத்ரீ
கபிலதனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

என் அரிய குணகணங்கள் கீர்த்தனை லீலைகள்
ப்ரியமுடன் கேட்டு சிந்தித்துப்பார்க்க
தென் உரிய பக்தியொன்றே மரண பயநீக்கம்
செயவல்லதென் றுண்மை செப்பினுய் அன்றோ?

"பரமாத்மாவின் மஹிமைகளையும் குணவிசேஷங்களையும் மஹான்களிடம் ச்ரவணம் செய்து, பகவந் நாமாவிலேயே மனதை நிறுத்தப் பயின்று வருவதால், இடைவிடாமல் த்யானம் செய்யும் ஸாத்ய பக்தி ஏற்படுமென்றும், அந்நிலையில் ஆத்மஸ்வரூபம் காலாதீதமான தென்கிற அனுபவம் விளங்குமென்றும் தாயான தேவஹூதிக்கு உபதேசித்தீரல்லவா?

15 - 6 விஷயப்பற்றுதலே நரக வேதனை

அஹஹ பஹுள ஹிம்ஸா ஸஞ்சிதார்த்தை: குடும்பம்
ப்ரதிதினம் அனுபுஷ்ணன் ஸ்த்ரீஜிதோ பாலலாலீ
விசதி ஹி க்ருஹ ஸக்த: யாதனும் மயி அபக்த:
கபிலதனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதீ:

கொடுவழியில் பொருள் ஈட்டிக் குடும்பம் பேணிக்
குழந்தைகளைக் காதலித்து குடிலனுகி
அறம் செய்ய விரும்பானுய் பக்தியின்றி
அடைவன் மாநரகம் என அறிவித்தாய் அன்றோ!

"தெய்வம் ஒன்று இருக்கிறது,' என்ற எண்ணமில்லாதவர்கள், விஷய வாஸனையின் பொருட்டு பொருளையும், அதனுல் கிடைக்கும் போலி சுகத்தையும் நம்பி, பலருக்கும்

Koviloor Digital Library

தனக்கும் ஹிம்ஸை செய்பவரும், பந்து வர்க்கங்களை போஷிப்பவரும், மனைவியால் ஜெயிக்கப்பட்டவரும், குழந்தைகளைக் கொஞ்சுகிறவரும், அறத்தை நினையாதவரும், நரக வேதனையை அடைகிறார்கள்'' என்று தாய்க்கு உபதேசித்தீர் அல்லவா?

15 - 7 நரகம் சென்றவன் பாப புண்ணியத்திற்கேற்ப மறு ஜன்மாவை அடைகிறான்.

யுவதி ஜடரகின்ன: ஜாதபோ தோபி அகாண்டே
ப்ரஸவ களிதபோத: பீடயா உல்லங்க்ய பால்யம்
புனரபி பத முஹ்யத்யேவ தாருண்ய காலே
கபிலதனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதி:

தாய் வயிற்றில் இடருற்றும் ஜனித்தும் பின்
லோக வாஸனையில் சிக்கி, யௌவனத்தில்
நேயமுடன் மோகமுற்றுத் தவிக்கச் செய்யும்
அக்ஞானம் நீங்காதான் பிறந்திறப்பான்
என்றாயால்?

யுவதியான தாயின் கர்ப்பத்தில் கஷ்டப்பட்டவனும், மனிதப் பிறவியை யடைந்தும், அக்ஞான ஸம்பந்தத்தால் கஷ்டத்தைப் போக்கிக் கொள்ள திறமையற்றவனும், பால்யத்திலும், யௌவனத்திலும் மோஹத்தையே அடைந்து மனைவி, வீடு, மக்கள், பொருள் இவைகளைச் சேர்த்து மிகக் கஷ்டப்பட்டு, ஈஸ்வர த்யான மின்றி, மறுபடியும் மரித்து, மனவாஸனைக்கேற்ப பாப ஜன்மத்தை யடைகிறான் என்று அக்ஞானநிலையை தங்கள் தாய்க்கு உபதேசித்தீரல்லவா?

15 - 8 இருவகையான மார்க்கங்கள்

பித்ரு ஸுரகண யாஜீ தார்மிகோ யோக்ருஹஸ்த:
ஸ ச நிபததி காலே தக்ஷிணாத் வோப காமீ
மயி நிஹிதம் அகாமம் கர்மது உதக்பதார்த்தம்
கபிலதனுரிதி த்வம் தேவஹூத்யை ந்யகாதி:

Koviloor Digital Library

தர்மிஷ்டனுய் பிதிரர் வானவர்பால் பயன் கருதி
பக்தி செய்வோர் மீண்டும் ஜனித்திடுவர்;
கர்மங்கள் கடமையென பயன் வேண்டாமலே செய்து
பக்தி செய்வோர் மீண்டும் ஜனித்திடார்
என்றுயால்?

பயனை விரும்பி பித்ருக்களையும் தேவதைகளையும் ஆராதித்து, சுகம் அனுபவிக்க ஸ்வர்க்கம் சென்று மறுபடியும் பூலோகத்திற்கு திரும்புதல் இருளான மார்க்கம். கடமையாக கர்மத்தையும், த்யானத்தையும் செய்பவர்கள் யோகியாய், மறுபிறப்பில்லாததும் பகவானுடன் ஒன்றுபட்டதுமான மோக்ஷத்தையடைகிருர்கள். இது பிரகாசமுள்ள மார்க்கம் என்று தங்கள் தாய்க்கு உபதேசித்தீரல்லவா?

15-9 தேவஹூதி முக்தியடைகிருள்; கபிலர் ஜனங்களுக்கு நன்மை செய்வதற்காக வடகிழக்கு திக்கில் இருந்து வருகிருர்.

இதி ஸுவிதித வேத்யாம் தேவஹே தேவஹூதிம்
க்ருதநுதிம் அநுக்ருஹ்ய த்வம்கதோ
யோகிஸங்கை :
விமலமதி: அஸௌ பக்தியோகேன முக்தா
த்வமபி ஜனஹிதார்த்தம் வர்த்தஸே ப்ராகுதீச்யாம்,

அறிவ(து) அறிந்து நினையேத்தும் தேவஹூதியினை
அனுக்கிரஹித்து யோகியர்கள் நாற்புறமும் சூழ
நெறியால் ஸர்வநலம் வடகிழக்கிலிருந்தே
நல்கிடவே நின்ருய் யாம் மகிழுமாறே!

ஹே குருவாயூரப்பா! அறியவேண்டியதை தங்களிடமே கேட்டறிந்து, ஸ்தோத்திரம் செய்த தாயான தேவஹூதியை அனுக்ரஹம் செய்து விட்டு, தாங்கள் ஸாதுக்களின் கூட்டுறவை விரும்வியவராய் ஜனங்களின் நன்மைக்

Koviloor Digital Library

காக வடகிழக்கு திசையில் இருக்கிறீரல்லவா? தேவஹூதியைப்போல் நாமும் பக்தி யோகத்தினுல் பரிசுத்தமாய், ஜீவ பாவத்தை விலக்கி, நித்யானந்த சாஸ்வத நிலையை யெய்துவோமாக.

15-10 பக்திவளர பகவத் அனுக்ரஹத்தை வேண்டல்

பரம கிமு பஹூத்யா த்வத் பதாம் போஜ பக்திம்
ஸகலபய விநேத்ரீம் ஸர்வ காமோப நேத்ரீம்
வதஸி கலு த்ருடம் த்வம் தத் விதூய ஆமயான் மே
குருபுவன புரேச த்வயி உபாதத்ஸ்வ பக்திம்.

அச்சங்கள் முழுவதையும் நீக்கிடுவாய், சர்வ
அபீஷ்டங்களையும் அளித்திடுவாய்; பக்தி
நிச்சயம், வைராக்யம், உந்தன் ஸாக்ஷாத்காரம்
அமைதி நிலை தந்து நோய் விலக்கி ஆள்வாயே!

எல்லாவற்றிற்கும் மேலானவரே! தங்களுடைய சரணாரவிந்த பக்தியே ஸகல கவலைகளையும் பயங்களையும் துன்பங்களையும் போக்கி, ஸர்வ அபீஷ்டங்களையும் கொடுக்கும் என்று தீர்மானமாகத் தெரிவித்த தாங்கள் இப்போது எங்கள் அன்பை ஏற்று, ரோகங்களைப் போக்க வேண்டும்! வைராக்யத்தையும் பிரம்ம ஸாக்ஷாத்கார ரூபமான ஞானத்தையும் உண்டுபண்ண வேண்டும்.

15வது ஸர்க்கம் முற்றிற்று. இத்துடன் மொத்த ச்லோகங்கள் 158

ஸச்சிதானந்தம்.
22, பிச்ச பிள்ளை சந்து, மைலாப்பூர், மதருஸ்-4.

வருஷ சந்தா ரூ. 5.

★

Koviloor Digital Library

ஸ்ரீ நாராயணீயம்

16-வது தசகம்

நர நாராயணுவதாரம் & தக்ஷயாகவர்ணனம்

16 1 தக்ஷனுடைய பதினாறு பெண்களின் மணம்

தக்ஷ: விரிஞ்ச தனய: அத மனோ: தனூஜாம்
லப்த்வா ப்ரஸூதி இஹ ஷோடச ஆப கன்யா:
தர்மேத்ரயோதச ததைளபித்ருஷு ஸ்வதாம் ச
ஸ்வாஹாம் ஹவிர்புஜி ஸதீம் கிரிசே த்வதம்சே

அயன் மகனும் தக்ஷன், ப்ரஸூதியின் மணத்தால்
பதினாரு மகளிரை ஈன்று; தர்மதேவதைக்கு
பதின்மூவரையும்; அக்னிக்கு ஸ்வாஹா; பித்ருக்கு
ஸ்வதா
உயர் சிவனுக்கு தாக்ஷாயணி; என ஈந்து
மகிழ்ந்தான்

பிறகு தங்கள் பிரேரணையினால் ப்ரம்மபுத்திரரான தக்ஷப்ரஜாபதி, ஸ்வாயம்புவ மனுவுடைய பெண்ணான ப்ரஸூதி என்பவளை மனைவியாகப் பெற்று, பதினாறு பெண்களைப் பெற்றார். அவர்களில் (1) ச்ரத்தா (2) மைத்ரீ (3) தயா (4) சாந்தி (5) துஷ்டி (6) புஷ்டி (7) க்ரியா (8) உன்னதி (9) புத்தி (10) மேதா (11) திதிக்ஷா (12) ஹ்ரீ (13) மூர்த்தி இவர்களை தர்மதேவதைக்கும், (14) ஸ்வதா என்ற பெண்ணை பித்ருதேவதைக்கும் (15) ஸ்வாஹா என்ற பெண்ணை அக்கினிக்கும் (16) ஸதி என்ற பெயருள்ள தாக்ஷாயணியை பரமசிவனுக்கும் விவாகம் செய்வித்தார் அல்லவா?

Koviloor Digital Library

16 2 நரநாராயண அவதாரம்

மூர்திர் ஹி தர்ம க்ருஹிணி ஸுஷுவே பவந்தம்
நாராயணம் நரஸகம் மஹிதானுபாவம்
யஜ்ஜன்மனி ப்ரமுதிதா: க்ருத தூர்ய கோஷா:
புஷ்போத்கரான் ப்ரவவ்குஷு: நுநுவு:
ஸுரௌகா:

தரும தேவதை மனையாள் மூர்த்தியிடமாக
நரநாராயண னெனவே நானிலத்தில் பிறந்து
பெற்றோர்கள் மகிழ்வெய்த தேவரெலாம் துதிக்க
தர்மத்தின் சிறப்பைக் காட்டினையன்றோ!

தர்மதேவதையின் பத்னியான மூர்த்தி, கொண்டாடத் தக்க பிரபாவமுடைய தங்களையே, நர நாராயணர் என இரட்டையாகப் பெற்றெடுத்து ஸந்தோஷமுற்று, வாத்யங்களை முழக்கி, புஷ்பாலங்காரங்கள் செய்து, ரிஷிகள் ஸ்துதிக்க தர்மத்தின் பெருமையைக் கொண்டாடினார்கள் அல்லவா?

16 - 3 ஸ்ரீ நர நராயணர் அஸுரர்களை ஸம்ஹரித்தல்

தைத்யம் ஸஹஸ்ர கவசம் கவசை: பரீதம்
ஸாஹஸ்ர வத்ஸர தப : ஸமரா பிலவ்யை:
பர்யாய நிர்மித தப: ஸமரௌ பவந்தௌ
சிஷ்டைக கங்கடம் அமும் ந்யஹதாம் ஸலீலம்

நரநாராயணர் தம்மில் தவம் யுத்தம் என்னும்
நற்கிரியை பிரதிவருஷம் மாற்றி அனுஷ்டித்து
திரமான கவசங்கள் ஆயிரம் பூண்டவனை
ஒரு கவசத்தானுக்கி ஒறுத்தீர்கள் அன்றோ!

Koviloor Digital Library

கோவிலூர் KOVILOOR MADALAYAM

ஓர் அஸுரன் பிறக்கும் போதே ஒன்றுக்கு மேல் ஒன்றாக ஆயிரம் கவசங்கள் படைத்தவனாக இருந்தான். ஆயிரம் வருஷம் தவமும் யுத்தமும் செய்தவர்களாலேயே தான் மடிய வேண்டுமென்று வரம் பெற்று உலகில் அஸுர க்ருத்யங்களை இயற்றி வந்தான். அதனால் தாங்களே நர னாகவும், நாராயணனாகவும் இரண்டு உருவாய் அவதரித்து, ஒருவர் யுத்தம் செய்வதும் ஒருவர் தவம் செய்வதுமாக ப்ரதி வருஷமும் மாறி மாறி ஆயிரம் வருஷங்களைக் கழித்து முறைப்படி ஸஹஸ்ர கவசன் என்ற அஸுரனை 999 கவசங்களை விலக்கி, விளையாட்டாகக் கொன்றீர்கள் அல்லவா?

16 - 4 ஸ்ரீ பகவான் மோக்ஷதர்மத்தை உபதேசிக்கிறார்; இந்திரன் மன்மதனை ஏவுகிறான்

அன்வாசரன் உபதிசன் அபி மோக்ஷ தர்மம்
த்வம் ப்ராத்ருமான் பதரிகாச்ரமம் அத்யவாத்ஸீ:
சக்ர: அத: தே சம தபோர்பல நிஸ்ஸஹாத்மா
திவ்யாங்கனா பரிவ்ருதம் ப்ரஜிகாய மாரம்.

நரனுடனே பதரிகாச்சிரமத்தில் வாழ்ந்து
மோட்ச தர்மம் அநுஷ்டித்து உரை செய்யுங்கால்
அரமகளிர் புடைசூழ இந்திரன் ஏவலினால்
பஞ்ச பாணன் உங்கள் முன்னே வந்தானால்!

தாங்கள் (கங்கைக் கரையில்) பதரிகாச்ரமத்தில் வஸித்து. ஜனங்கள் கோரமான கர்ம பந்தத்திலிருந்து விடு தலை யடைவதற்காக, மனம் முதலிய இந்திரியங்களை யடக் கும் மோக்ஷ தர்மத்தை அநுஷ்டித்து, பக்தர்களை ரக்ஷிக்க உபதேசித்து வருகையில், இந்திரன் தன் பதவி நீங்கு மென்ற பீதியினால் தங்கள் தபஸைக் கெடுக்க, அழகிய

Koviloor Digital Library

ஸ்திரீகளினால் சூழப்பட்ட மன்மதனை தங்களிடம் அனுப்பி னானல்லவா?

16 - 5 மன்மதன் முயற்சி வீணாக, பயப்படுகிறான்

காம: வஸந்த மலயாநில பந்து சாலீ
காந்தா கடாக்ஷ விசிகை: விகஸத் விலாஸ:
வித்யன் முஹுர்முஹு: அகம்பம் உதீக்ஷ்ய ச த்வாம்
பீத: அபவத்; அத ஜகதே ம்ருதஹால பாஜே
த்வயா.

மலய மாருதன் வசந்தன் சேர்ந்து புடைசூழ
வளைந்து வரக் கடைக் கண்ணும் வாளிகளால்
மகளிர்
கலக்கிடவும் நிலை அசையாதிருக்கும் நினைக்கண்டு
கம்பித்தான்; புன்சிரிப்பாய்க் கழறினாய் அன்றோ!

மன்மதன், வஸந்தன் தென்றல் என்ற ஸகாக்களுடன் பலவித ச்ருங்கார சேஷ்டைகளோடு கூடிய தேவஸ்திரீ களை தங்கள் மீது ஏவினான்; தாங்கள் காம விகாரத்திற்கு உட்படாமலும், மன்மதனைக் கோபிக்காமலும் மோக்ஷ தர்மத்தைக் கடைப்பிடித்து. புன்சிரிப்புடன் அவனுக்கு அபய மளித்திரல்லவா?

16 - 6 பகவான் மிக அழகிய பணிப் பெண்களைத் தோற்றுவிக்கிறார்

பீத்யா அலம் அங்கஜ வஸந்த ஸுராங்கனா வோ
மன் மானஸம் இஹ ஜுஷத்வம் இதி ப்ருவாண:
த்வம் விஸ்மயேன பரித: ஸ்துவதாம் ஏஷாம்
ப்ராதர்சய: ஸ்வ பரிசாரக காதராக்ஷீ:

Koviloor Digital Library

அரம்பையரே ! மன்மதனே! அஞ்சற்க, நம்
பணிப்பெண்கள் வரவேற்க மரியாதை ஏற்றிடுக;
சுரம்பாடும், ஒளியுடைய தோகையரைப் பாரீர்
சுகமுறுவீர் என்றருளி மயக்கினீர் அன்றோ!

ஏ மன்மதனே! தென்றலே! தேவஸ்திரீகளே! நீங்கள் பயப்பட வேண்டாம்; என் மனஸால் சிருஷ்டிக்கப்பட்டு இங்கு பணி செய்கின்ற அழகிய ஸ்திரீகளால் வரவேற்கப் பட்டவராய், பூஜையைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று புன்சிரிப்பால் விளக்கினீர் அல்லவா? இங்கு பணி புரியும் ஸ்திரீ ரத்னங்களுக்கு, மன்மதனுடன் வந்த தேவ ஸ்திரீகள் சிறிதும் சரி நிகராக மாட்டார்கள் என்றும் விளக்கியது காண்க.

16 - 7 ஊர்வசியை பரிசாக மன்மதனுக்கு அளிக்கிறார்

ஸம்மோஹனாய மிலிதா: மதனாய த: தே
த்வத்தாஸிகா பரிமளை: கில மோஹம் ஆபு:
தத்தாம் த்வயா ச ஜக்ருஹ¬: த்ரபயைவ ஸர்வ
ஸ்வர்வாஸி கர்வ சமனீம் புன: ஊர்வசீம் தாம்.

மயக்க வந்த மாதர்களும் மாரனும் நின் ஏவல்
மகளிர் பரிமளந் தனிலே மயங்கியபின் பொன்போல்
தயக்கமிலா ஒளி படைத்த ஊர்வசியை அருளால்
தந்தனையால்; நாணமுடன் தாம் ஏற்றாரன்றோ!

மன்மதன், தென்றல், தேவஸ்திரீ இவர்களால் மோஹிக்கப் படாமல், தங்கள் பணிப் பெண்களின் வாஸனைகளால் அவர்களுக்கு மோஹம் வரச்செய்து, தாங்கள் பரிசாக அளித்த மிக அழகிய ஊர்வசியை வெட்கத்துடன் மன்மதன் ஏற்றுக் கொள்ளச் செய்தீரல்லவா? விசேஷ

Koviloor Digital Library

கருத்து (1) கோபத்துக்கு இடங்கொடாமை (2) தபசுக்கு விக்னம் செய்பவர்கள் மீதும் கருணை பாராட்டுவது, இவை மோட்ச தர்மமாகும்.

16 - 8 மன்மதன் தேவேந்திரனிடம் ஸ்ரீபகவானுடைய மஹிமையை எடுத்துரைக்கிறார்.

த்ருஷ்ட்வா ஊர்வசீம் தவ கதாம் ச நிசம்ய சக்ர:
பர்யாகுல: அஜனி பவன் மஹிமா வமர் சாத்
ஏவம் ப்ரசாந்த ரமணீய தராவதாராத்
த்வத்த: அதிக: வரத க்ருஷ்ண தனு: த்வமேவ.

நித்தம் ஒளிர் எழிலாளாம் ஊர்வசியைக் கண்டும்
நின்மஹிமை தனைக் கேட்டும் கவலையுற்றான்
இந்த்ரன்:
இத்தகைய நரநாரணர் தமக்கும் மேலாய்
கிருஷ்ணாவதாரத்தில் நின் மஹிமை நிற்கும்.

ஊர்வசியை தேவேந்த்ரன் பார்த்து, தங்கள் மஹிமையை ஆராய்ந்து உணர்ந்து, கவலையை யடைந்தான். நரநாராயணாவதாரம் செய்த தாங்களே கிருஷ்ணாவதாரம் செய்து லோகத்தை அதர்மத்தினின்று காப்பாற்றினீரல்லவா? விசேஷ கருத்து: வெயிலில் சென்று தாபமடைந்தவர்களுக்கு குளிர்ந்த ஜலம் போல தபஸ்விகளின் கூட்டுறவு நன்மை பயக்கும்.

16 - 9 தக்ஷன் சிவபிரானை த்வேஷித்து, தன் பெண்ணையும் அவமதிக்கிறான்.

தக்ஷஸ்து தாது: அதி லாலனயா ரஜோந்த:
நாத்யாத்ருத த்வயி ச கஷ்டம் அசாந்தி: ஆஸீத்
யேன வ்யருந்த ஸ பவத்தனுமேவ சர்வம்
யஜ்ஞே ச வைரபி சுனே ஸ்வஸுதாம் வ்யமானீத்

Koviloor Digital Library

தக்ஷனவன் ராஜஸத்தால்; மேலும் பிதாவின்
லாலனையால்
கர்வமே மேலிட்டு, அறிவும் அமைதியும் இழந்து
பக்ஷமிலா த்வேஷத்தால், மாப்பிள்ளையென நினைந்து
பரமசிவன் தனைப் பகைத்து தன் பெண்ணையும்
அவமதித்தான்.

தக்ஷன், பிதாவான பிர்ம்மாவால் மிகவும் இடம் கொடுக்கப்பட்டு, சத்துவ குணத்திற்கு தகுதியின்றி ரஜோ குணத்தால் மதியிழந்து, தங்கள் ஸ்வருப மேயான பரமசிவனிடத்தில் (மாப்பிள்ளை என்று) மரியாதையை எதிர்பார்த்து கிடைக்காமையால், த்வேஷமடைந்து அவமானம் செய்ய, யாகம் செய்யலானன். அழைப்பின்றியே வந்த தன் பெண்ணான ஸதீ தேவியையும் அவமதித்தான்.

16-10 தக்ஷயாகத்வம்ஸம்; தக்ஷன் அறிவுபெறல்.

க்ருத்தேச மர்த்திதமக: ஸ து க்ருத்தசிர்ஷ:
தேவப்ரஸாதித ஹராத் அத லப்த ஜீவ:
த்வத் பூரித க்ரதுவர; புனராய சாந்திம்
ஸத்வம் ப்ரசாந்திகர பாஹி மருத்புரேச.

சினமுற்ற சிவனாலே சிரம்இழந்த தக்ஷன்
நிலைகண்டு, தேவர்கள் துதிசெய்ய காத்தாய்;
கனமுற்ற தோஷமெல்லாம் நிவாரணம் செய்துவரும்
கருணா! குருவாயூரா! கலிநோய் தீர்த்தாள்வாய்!

(ஸதியான தாஷாயணி தஷயாகத்தில் சிவநாம வைபவத்தை உபதேசித்துவிட்டு, தன் சரீரத்தை யோகாக்னியில் எரித்துக்கொண்டாள். நாரதரால் இதைக்கேள்வியுற்ற பரமசிவன் தன் ஜடையிருந்து ஒரு பூதத்தை உண்டாக்கி பலருத்ரகணங்களுடன் அனுப்பி தக்ஷ யாகத்தை த்வம்ஸம்

Koviloor Digital Library

செய்தார்) தக்ஷன் தலைவெட்டப்பட்டும், தேவர்கள் பிரார்த்தனையினால் பரமசிவன் மன்னித்து உயிர் வழங்க தக்ஷனும் பரமசிவனைத்துதித்து அறிவையடைந்தான். அழிக்கப்பட்ட யாகம் மறுபடியும், தங்களால் பூர்த்தியாயிற்று; பேதபுத்தியை போக்கி துக்கங்களை யொழிக்கும் குருவாயூரப்பா) தாங்களே உலகம் யாவையும் என்றும் காக்கவேண்டும்

16வது ஸர்கம் முற்றிற்று. இத்துடன் மொத்த ச்லோகங்கள் 168

ஓம் தத்ஸத்.

ஸச்சிதானந்தம்

ஸ்ரீ நாராயணீயம்

17-வது தசகம்

துருவ சரித்திரம்

17 - 1 உத்தான பாதன் ஸுநீதியை, குழந்தை துருவனுடன் நிராகரிக்கிறான்

உத்தான பாத ந்ருபதே: மனு நந்தனஸ்ய
ஜாய பபூவ ஸுருசி ர்நிதராமபீஷ்டா
அன்யா ஸுநீதி ரிதி பர்து: அனாத்ருதா ஸா
த்வாம் ஏவ நித்யம் சரணம் கதா அபூத்.

சுவாயம்பு மகனான உத்தான பாதன்
சுருசி யென்ற மனையாள் பால் மிக நேசனானன்
அவாய் நிலையில் துருவ னெனும் மகனோடு சுநீதி
ஆதரவில்லா து(உ)னது சரண் துணையாய் வாழ்ந்தாள்.

Koviloor Digital Library

மனுவின் புத்திரனுன உத்தான பாதன் என்ற அரசனுக்கு, மிகவும் ப்ரீதி செய்யப்பட்ட வளாய் ஸுருசி என்ற இளம் மனைவி இருந்தாள், ஸுநீதி என்ற மற்ருெரு மூத்த மனைவி, வினைவசமாக துருவன் என்ற குழந்தையுடன் அரசனுல் விலக்கப்பட்டு, கதியற்றவளாய் பிரதி தினமும் தங்கள் திவ்ய சரணங்களையே புகலிடமாகக் கொண்டவளானுள்.

(துன்பம் பகவத் பக்திக்கு மூலமாய் இருந்து, அமைதியும் கீர்த்தியும் உண்டு பண்ணும் சாதனமாவது தெளிக.)

17 - 2 த்ருவன் தந்தை மடியில் ஏறுகையில் அஸூசை யுள்ள ஸுருசியினுல் கடுமையாக இழுத்துத் தள்ளப்படுகிருன்

அங்கே பிது: ஸுருசி புத்ரகம் உத்தமம் தம்
த்ருஷ்ட்வா த்ருவ: கில ஸுநீதி ஸுத: அதி
ரோக்ஷ்யன்
ஆசிக்ஷிபே கில சிசு: ஸுதராம் ஸுருச்யா
துஸ்ஸங் த்யஜாகலு பவத் விமுகை: அஸூயா.

சுருசி மகன் உத்தமன் தன்தந்தை மடியேறித்
துளைதல் கண்டு துருவனும் அத்துளைதலை விரும்பி
அருகில் வரச் சுருசி அதட்டித் தள்ளினதால்
அசூயை யுள்ளோர் அன்பில்லா ராவரே.

ஸுநீதியின் பிள்ளை த்ருவன், தகப்பன் மடியில் உட்கார்ந்திருத்த தன் சகோதரன் உத்தமனைப் பார்த்து, தானும் மடியில் ஏறி உட்கார யத்தனம் செய்தான். பொருமை என்ற கெட்ட குணத்தால் பீடிக்கப்பட்ட சிற்றன்னை ஸருசியினுல் அப்பொழுது, கடுமையாக இழுத்துத் தள்ளப்பட்டான்.

(பகவத் பக்தியில்லாதவர்கள் நல்ல குணமுள்ளவர் களிடத்திலும் தோஷத்தையே கற்பனை செய்வார்கள் என்பது தெளிக.

17-3 பாபத்தின் பயனே துக்கம்; பாபம் செய்யாமலிருக்க பகவத் சரண த்யானமே உபாயம். கர்மவினை கர்மானு பவத்தால் கழியினும் மூலமான கர்ம வாஸனை, த்யானம் ஒன்றினாலேயே விலகும்.

த்வன் மோஹிதே பிதரி பச்யதி தார வச்யே
தூரம் துருக்தி நிகத: ஸ கதோ நிஜாம்பாம்
ஸா அபி ஸ்வகர்மகதி ஸந்தரணாய பும்ஸாம்
த்வத் பாதமேவ சரணம் சிசவே ச சம்ஸ.

கடுஞ் சொல்லால் மனம் புண்ணாய்த் துருவன் தன் தாய்பால்
கலந்திட்டான்; "கர்மவினை: என் செய்வாய்; போக்கிடவே
அருங் சுவையார் மாதவனின் திருவடியே சரணம்
ஆம்" என்று துவருவனுக்கு ஸுநீதி உரைத்தனளே!

அதர்மத்தில் மோஹங் கொண்ட உத்தான பாதன் அநாதரவினால், ஸுரிசியால் விரட்டப்பட்ட 5 வயதான துருவன், காட்டில் தவம் செய்யும் தன் தாயினிடம் சென்று முறையிட்டான். ஸுநீதி" ஒருவன் தனக்கு நேரும் ஜன்மா ந்தரீயமான கர்மவினையை, போக்கிக் கொள்வதற்கு, பகவானுடைய பாத கமலங்களையே நன்கு த்யானம் செய்ய வேண்டும்" என்று தன் மகன் துருவனுக்கு உபதேசித்தாள்.

விசேஷகருத்து மிகஅவசியமான தரும நீதிகளை வாழ்க்கையில் உணராதவர்களுக்கு, எது நல்லது எது கெட்டது என்ற விவேகம் சூன்யமாய் விடுகிறது.

Koviloor Digital Library

17-4 துருவன் நாரதரால் ஜபமந்த்ரம் உபதேசிக்கப்படுகிறுன்

ஆகர்ண்ய ஸ: அபி பவதர்ச்சன நிச்சிதாத்மா
மானி நிரேத்ய நகராத் கில பஞ்ச வர்ஷ:
ஸந்த் ருஷ்ட நாரத நிவேதித மந்த்ர மார்க:
த்வாம் ஆர ராத தபஸா மது கான ஞந்தே.

மான(ம்) மிக்கான்: ஐந்தாண்டு வாய்ந்த பிள்ளை நினை
வழிபட்டு உய்வ தென்னும் மனத்திடத்தாஞகி
தேன முதக் கான் வந்து நாரதன் சொல் மறையால்
தேவா! நின் சரணத்தை நாடிஞன் அன்ருே!

தாய் சொல்லிய படி துருவன் 5 வயதிலேயே, அரசனு க்குரிய ரோஷத் துடன், தங்களை பூஜிப்பதற்கு புன்யமான மதுவனம் சென்ருன். வழியில் தங்கள் பிரேரணையிஞல் நாரத மஹ ரிஷி குருக்கிட்டு, துருவனுக்கு "ஓம் நமோ பகவதே வாஸு தேவாய" என்கிற மஹா மந்திரத்தை உபதேசம் செய்து யோக மார்க்கத்தில் அந்தர் த்யானம் செய்யும் வழியை காட்டிஞர்.

17-5 துருவனின் யோகம்

தாதே விஷண்ண ஹ்ருதயே நகரீம் கதேன
ஸ்ரீநார தேன பரிஸாந் த்வித சித்த வ்ருத்தெள
பால: த்வதர்பித மஞ: க்ரம வர்த்திதேன
நின்யே கடோர தபஸா கில பஞ்ச மாஸான்.

மனம் வருந்தும் உத்தான பாதன் தனை நாடி,
மாமுனிவன் நாரதரும், "துருவன் தவம் பூண்டு
அனம் உறக்கம் சோர்வின்றி இந்திரியம் ஒடுக்கி,
ஐந்து திங்கள் த்யானத்தால் சிறப்புற்ருன் என்ன":

Koviloor Digital Library

உத்தான பாதன், தன் மகன் துருவன் மது வனத்திற்குச் சென்ற பின் தன் தவறை நினைத்து வருந்தினுன் ஸ்ரீநாரத முனி உத்தான பாதனைப் பார்த்து துருவன் ஐந்து மாதத்தில் ஐந்து இந்திரியங் களையும் ஒடுக்கி பஞ்ச கோசங்களையும் சுத்தி செய்துக் கொண்டு ஸ்ரீவிஷ்ணுவைக் குறித்து நியமமாக தவம் செய்வதை அறிவித்தார். உத்தான பாதனும் மன ஆறுதலை யடைந்தான்.

17-6 பகவான் துருவனுக்கு தரிசனம் கொடுத்தார்

தாவத் தபோபல நிருச் ச்தஸிதே திகந்தே
தேவார்த்தித: த்வம் உதயத் கருணார்த்ர சேதா:
த்வத் ரூப சித்ரஸ நிலீன மதே: புரஸ்தாத்
ஆவிர்ப் பூவித விபோ கருடாதி ரூட:

சிறுவனுடைத் தவ வலியால் திசை மூச்சுச் திணறத்
தேவர்கள் தம் பிரார்த்தனையால் செழுங்கருணை மீறித்
செறுவனெனும் துருவன் முன்தோன்றி யவன் மகிழ
உயர் கருடன் மீதேரிக் கண் திறந்தாயன்றோ!

துருவன் தவத்தால் ஸகல பிராணிகளும் மூச்சுவிடமுடியாமல் திணறினார்கள். தாங்கள், தேவர்களினால் பிரார்த்திக்கப்பட்டு, தங்கள் ஸ்வரூப ரஸத்தில் மூழ்கிய மனதுடைய துருவன் முன்னிலையில் கருடன் மீதேறினவராக காட்சியளித் தீரல்லவா? என்று நாராயண பட்டதிரிகேட்க ஸ்ரீகுருவாயூரப்பன் "ஆம்" என்று தலையை ஆட்டினார்.

17-7 துருவன் கன்னத்தில் பகவான் வேதமயபான சங்கினால் தொடுகிறார்.

த்வத் தர்சன ப்ரமதபார தரங்கிதம் தம்
த்ருக் ப்யாம் நிமக்னமிவ ரூப ரஸாயனேதே

Koviloor Digital Library

கோவிலூர் ஆண்டவர்
A. No. 4133
நூலகம், கோவிலூர்

Koviloor Digital Library

அறிவிப்பு

கலி தோஷம் நீங்கி, வேத வித்தாகவும் சூரராகவும் உலகத்தின் நன்மையில் ஈடுபாடுடையவராகவும், கடவுள் ஞானம் உடையவராகவும் இருக்க விரும்பினுல் தினமும் பாராயணம் செய்ய வேண்டிய கிரந்த மாலா (உரையுடன்)

1. வால்மீகி ராமாயணம் ஸுந்தரகாண்டம் 2-பாகம்	ரூ. 3	00
2. நாராயணீயம் 3-பாகம்	ரூ. 3	00
3. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் பூஜை	ரூ. 3	00
4. ஸ்ரீமத் பகவத்கீதை உரையுடன்	ரூ. 3	00
5. கடோப நிஷத்து உரையுடன்	ரூ. 1	25

V. P. சார்ஜ் ரூ. 2 அதிகம்

கிடைக்கும் இடம்:

ஸ்ரீ சங்கர சத்குரு சேவாஸ்ரமம்

22, பிச்சு பிள்ளை சந்து, மைலாப்பூர்

மதருஸ்-4.

உ. கோவிலூர்
KOVILOOR MADALAYAM
மடாலயம்